# கடவுளின் வார்த்தை உயிருள்ளது

கடவுளின் வார்த்தை உயிருள்ளது
ஆற்றல் மிகுந்தது
ஆவியில் மலர்ந்தது நல்வழி சேர்ந்தது
இதயத்தை அறிவது

**1**
சோகங்கள் தோன்றிடும் வாழ்வினிலே
ஆறுதல் அளித்திடும் வார்த்தையிது (2)
நம்பிக்கை இழந்து சோர்ந்தவர்க்கு
புதுவழி தந்திடும் வார்த்தையிது
அமைதியை அருளும் வார்த்தையிது
ஆற்றலைத் தந்திடும் வார்த்தையிது

**2**
துயர்களும் தடைகளும் கடந்துவர
துணிவினை தந்திடும் வார்த்தையிது (2)
நீதியும் அன்பும் நிலைத்து எழ
நேர்வழி காட்டிடும் வார்த்தையிது
ஏற்றத் தாழ்வுகள் தகர்ந்துவிட
சமத்துவம் படைக்கும் வார்த்தையிது